இப்பொழுது கிடைத்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை எங்கே தொடங்கலாம் என்பது வசதிகளைப் பற்றி ஆராய்ந்து தொடங்கப்படும். மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசு லைசென்ஸ் வழங்கியதற்குப் பின்னால் தொடங்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : கைத்தறித் தொழிலுக்கு மிகத் தேவையானது ரசாயனப் பொருள்கள் உற்பத்தி. சேலம் ஜில்லா கைத்தறித் தொழிலுக்கு மிகப் பிரக்யாதி பெற்ற இடம். அங்கே மிக அதிகமாக நெசவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிற்சாலை சேலம் ஜில்லாவில் தொடங்கப்படுமா ? எவ்வளவு டன் உற்பத்தியாகும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த மாவட்டத்தில் தொடங்கப்படும் என்பதை ஆராய்ந்து முடிவு செய்யலாம். இது எல்லா மாவட்டங்களுக்கும் தேவைப்படுகின்ற பொருளாகும். இப்பொழுது இந்த அரசாங்கத்தின் கொள்கை புதிய தொழிற்சாலைகளையெல்லாம் பின்தங்கிய பகுதிகளை நோக்கி, கிராமங்களை நோக்கிச் செல்லவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். ஆகவே, இதுபற்றி ஆலோசித்ததற்குப் பின்னால் முடிவு எடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இயந்திரத் தொழில்களைப் பொறுத்தவரையில் பிற மாவட்டங்களைவிட பின்தங்கியிருக்கின்ற காரணத்தினால், நிறைய கைத்தறித் தொழிலாளர்கள் அங்கே இருக்கின்ற காரணத்தினால், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மேலப்பாளையத்தில் ஏறத்தாழ 20,000 கைத்தறிகள் இருக்கின்ற காரணத்தினால், அந்தத் தொழிற்சாலையை அரசு அங்கே துவக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் கேட்ட கேள்விக்கு இப்பொழுது அமைச்சர் அவர்கள் பதில் அளித்தாரே ? மறுபடியும் அதைப் பற்றியே கேட்டால் எப்படி ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் தொகுதி மக்களிடம் கொண்டிருக்கக்கூடிய அன்புக்கு நான் மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன்.

Naphtha Cracker Plant in Manali

* 275 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a Naphtha Cracker Plant in Manali near Madras; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) &(இ) தமிழ்நாட்டு அரசுக்கு முற்றிலும் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கூட்டுறவு நிறுவனம் ரசக் கற்பூரத்தைலத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை ஒன்று தமிழ்நாட்டில் தோதான ஒரு இடத்தில் நிறுவ அனுமதி கேட்டு மனு செய்திருக்கிறது. அந்த மனு இந்திய அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

1970 செப்டம்பர் 7]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ரசக்கற்பூரத் தைலத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை எங்கே ஏற்பட இருக்கிறது? அதற்கு மூலதனம் எவ்வளவு தேவைப்படும்? ரசக்கற்பூரத்தைலம் என்னென்ன பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெட்ரோல் கெமிகல் காம்ப்ளெக்ஸ் மணலிக்கு அருகில் கிட்டத்தட்ட ரூ. 200 கோடியில் பெரிய திட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது. என்ஜினியர்ஸ் இண்டியா கம்பெனி தங்களுடைய ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே ஐ.ஸி.ஐ. கம்பெனி தங்களுடைய ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். இதற்கு நாப்தா கிராக்கர் என்று சொல்லப்படுகிற மூலத் தொழிற்சாலையை மட்டும் முதலில் தொடங்குவது. அதிலிருந்து வருகிற டவுன் ஸ்ட்ரீம், ஒவ்வொரு பொருளாக வரும்பொழுது, அந்தப் பொருள்களுக்கு பல தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். இதற்கு முக்கியமான மூலப்பொருள் நாப்தா நம்முடைய மெட்ராஸ் ரிபைனரியில் ஓரளவுக்குத்தான் கிடைக்கிறது. இது நாட்டில் பற்றாக்குறையாக இருக்கிறது என்ற ஒரு வாதம் மத்திய அரசினால் வைக்கப்படுகிறது. நம்முடைய அரசாங்கம் அதற்குப் பதில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், இந்த நாப்தாவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தாலும், எக்ஸ்போர்ட் ஓரியண்டெட் ஸ்கீம் என்ற முறையில் எவ்வளவு மூலப் பொருள் இறக்குமதி செய்கிறோமோ அவ்வளவு உற்பத்திப் பொருள், செய்பொருள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற அடிப்படையிலே பெட்ரோ கெமிகல் காம்ப்ளெக்ஸ் திட்டத்தை சுமார் 200 கோடி ரூபாயில் நம்முடைய மாநில அரசிற்குத் தர வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இதற்குப் பின்னால் விவரங்களை நாம் முடிவு செய்யலாம்.

குடகனாறு, நொய்யலாறு திட்டம்

*276 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூருக்கு அருகில் உள்ள குடகனாறு, நொய்யலாறு திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. வை. சுவாமிநாதன் : இந்தத் திட்டத்தை உடனே நிறைவேற்ற அரசாங்கம் முயலவேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் கரூருக்கு தெற்கு வடக்கில் பல ஆயிரக்கணக்கான நிலங்கள் சாகுபடிக்கு பயன்படுத்தக்கூடிய நிலை இருப்பதினால், இந்தத் திட்டத்தை எப்பொழுது தொடங்குவதற்கு ஆயத்தம் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு புதிய நீர்த் தேக்கத் திட்டம் போதுமான நீர் வாயில்களின்றி அத்தகைய ஒரு திட்டத்தில் ஏற்படும் செலவுக்கேற்ற பயன்களின்றி இருந்தால் அதிகப்பயன்களைப் பெற குடகனாறு திட்டத்தின்கீழ் மதுரை, திருச்சி மாவட்டங்களில் உள்ள ஏரி குளங்களையும் அணைக்கட்டுக்களையும் மேம்படுத்தல் என்று குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க தலைமை பொறியாளர் (நீர்ப்பாசனம்) கேட்டுக்கொள்ளப்பட்டார். நான்கு திட்டங்கள் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு நிறை